ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 672/16—1991 ජූලි 25 වැනි බ්‍රහස්පතින්දා— 1991.07.25

672/16 ஆம் இலக்கம்—1991 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I: தொகுதி (I)—பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பி. 21/78 III

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் அச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச்சட்டம்.

கொழும்பு,
22 யூலை, 1991.

திருமதி சி. எஸ். கருணாரத்ன,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கட்டளைச்சட்டம்

1. 1990 சனவரி 05 ஆம் திகதிய 591/18 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இலங்கை திறந்த பல்கலைக்கழகக் கட்டளைச்சட்டம், அதன் 18 ஆம் பந்தியின் 2 ஆம் உட்பந்தியில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பந்தியின (vi) ஆம் வாசகத்தில் உள்ள “மேற்படாமலும் இருத்தல் வேண்டும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “மேற்படாமலும் இருத்தல் வேண்டும்; அத்துடன்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அவ்வுட்பந்தியின் (vi) ஆம் வாசகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வாசகத்தை உட்புகுத்துவதன் மூலம் :

“(vii) துறையின் மாணவர்களினால் அவர்களது எண்ணிக்கையின் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் இரண்டு மாணவர்கள்.”.

2. இக்கட்டளைச் சட்டத்தின் மூலம், 1990 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இலங்கை திறந்த பல்கலைக்கழகக் கட்டளைச்சட்டத்துக்குச் செய்யப்பட்ட திருத்தம், 1991 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

08-409